**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 90/2023

நாள் : 05.02.2025

வா.சா.1 திரு.ராஜேந்திரன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.14 கிரைய பத்திரம் ஆனது, நான் தாவா சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்பு கிரையம் ஏற்பட்டது என்றால் சரிதான். அதனால் அந்த கிரைய பத்திரம் பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்திற்கு வா.சா.ஆ.14 கிரைய சொத்தானது நான்குமாலாக இல்லை என்றால் சரியல்ல. தென்பக்க மாலாக உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள சொத்துவிவரத்தில் தெற்குமாலாக வா.சா.ஆ.14 சொத்தின் உரிமையாளரை காட்டவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.14 கிரைய பத்திரத்தில் ராமுநாடாரின் வாரிசுகள் எந்த தேதியில் பாகம் செய்துகொண்டார்கள் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்குத் தெரியாது. ராமுநாடாரின் வாரிசுகள் தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவித்தது இல்லை என்றும், வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்று சொல்வது சரியல்ல. வா.சா.ஆ.14 ஐ எழுதிக்கொடுத்தவர் அல்லது எழுதிவாங்கியவரை விசாரித்தால் தான் நான்கு எல்லைகள் பற்றிய விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/-ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .